Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

**விளம்பரதாரர்கள் தேவை**

தமிழகம் முழுவதும் 234
சட்டமன்ற தொகுதிகளுக்கும்
செய்தி – விளம்பரம்
சேகரிக்க முழு நேர – பகுதி நேர
பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

DHINATH DHALAM Tamil & English daily Paper

**செய்தியாளர்கள் தேவை**



தமிழகம் முழுவதும்
மாவட்டம் & தாலுகா
வாரியாக சந்தாதாரர்
அடிப்படையில்
ஆண்/பெண்
நிருபர்கள் தேவை

☎ 94440 82959

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D.,

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 076 | திங்கள் Monday | 15.06.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

## இரு நாடுகளுக்கு இடையே எதிர்கால நடவடிக்கைகள்:

# பிரான்ஸ் அதிபர் மேக்ரானுடன் பிரதமர் மோடி பேச்சுவார்த்தை



கடந்த 2014-ம் ஆண்டு நடந்த நாடாளுமன்ற தேர்தலில் வெற்றிபெற்று பிரதமர் மோடி பிரதமர் ஆனார். இப்போது 3-வது முறையாக பதவியில் நீடித்து வருகிறார். அவரது அரசு 12 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது.

இந்த12ஆண்டுகாலத்தில்அவர்பல்வேறு உலகநாடுகளுக்கு சென்று வந்துள்ளார். சமீபத்தில் ஐக்கிய அரபு குடியரசு, ஹாலந்து, சுவீடன், நார்வே, இத்தாலி ஆகிய நாடுகளுக்கு சென்று வந்தார்.

இந்த நிலையில் அவர் மீண்டும் வெளிநாட்டு பயணம் மேற்கொள்ள உள்ளார். இந்த முறை ஐரோப்பிய கண்டத்தில் உள்ள பிரான்ஸ் மற்றும் சுலோவாக்கியா நாடுகளுக்கு செல்கிறார். இதனையடுத்துஅவர்நேற்று சிறப்பு விமானம் மூலம் புறப்பட்டு சென்றார். பிரான்சில் உள்ள நீஸ் விமான நிலையத்தை மோடி நேற்று இரவு சென்றடைந்தார். அங்கு அவருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

பிரான்ஸ் மற்றும் சுலோவாக்கியா நாடுகள் விடுத்த அழைப்பின் பேரில் 6 நாள் சுற்றுப்பயணத்தை தொடங்கியுள்ளார். தனது பயணத்தைநேற்று அவர் தொடங்குவதற்கு முன்பு ஒரு அறிக்கை வெளியிட்டிருந்தார். அதில் பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மேக்ரானை நீஸ் நகரில் சந்திக்கும் போது, பிப்ரவரி மாதத்துக்கு பிறகு, ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்து மதிப்பாய்வு செய்யப்படும் என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்த சந்திப்பின்போது, இரு நாடுகளுக்கு இடையே எதிர்கால நடவடிக்கைகள் குறித்து விவாதிக்கப்படும் என்றும், பரஸ்பரம் பயனளிக்கும் முக்கிய சர்வதேச விவகாரங்கள் குறித்தும் விவாதிக்க ஆவலுடன் காத்திருப்பதாக பிரதமர் தெரிவித்துள்ளார்.

நீஸ் நகரில் (ஞாயிற்றுக்கிழமை) பிரான்ஸ் அதிபர் மேக்ரானுடன் இணைந்து 'பாரத் இன்னோவேட்ஸ்' நிகழ்ச்சியைத் தொடங்கி வைக்க உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். 'இந்தியா-பிரான்ஸ் புத்தாக்க ஆண்டு' என்பதன் பின்னணியில் நடைபெறும் இந்த முக்கிய நிகழ்ச்சி, இந்தியாவின் நம்பிக்கைக்குரிய புத்தொழில் நிறுவனங்களை சர்வதேச அளவிலான முதலீடுகளுடன் இணைப்பை ஏற்படுத்தும் என்றும், இந்தியாவின் உயர்கல்விச்சூழல் அமைப்பில் இருந்து உருவாகும் புதிய கண்டுபிடிப்புகளுக்கு இது ஒரு உந்துசக்தியாக அமையும் என்றும் பிரதமர் கூறியுள்ளார்.

பிரான்ஸ் பயணத்தை முடித்துக்கொண்டு, நீஸ் நகரில் இருந்து, நாளை (திங்கட்கிழமை) சுலோவாக்கியா நாட்டுக்கு செல்லவுள்ளதாக அந்த அறிக்கையில் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

சுலோவாக்கியா 1993-ம் ஆண்டு சுதந்திரம் அடைந்த பிறகு இந்திய பிரதமர் மேற்கொள்ளும் முதல் பயணம் இதுவாகும். இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க பயணம், இருதரப்பு உறவில் ஏற்பட்டுள்ள வலுவான முன்னேற்றத்தைமேலும் வலுப்படுத்தும்.

பிராட்டிஸ்லாவாவில் அந்நாட்டு அதிபர் பெல்லெக்ரினி, பிரதமர் பிகோ ஆகியோருடன் கலந்துரையாட ஆவலுடன் காத்திருப்பதாக பிரதமர் மோடி தெரிவித்துள்ளார். அந்நாட்டின் வர்த்தக நிறுவன தலைவர்களுடனும் உரையாடும் வாய்ப்பு கிடைக்கும் என்று நம்பிக்கைத் தெரிவித்துள்ளார்.

சுலோவாக்கியாவில் இருந்து எவியன் நகருக்கு செல்லும் பிரதமர், 16 மற்றும் 17-ந் தேதிகளில் அங்கு நடைபெறும் ஜி 7 உச்சி மாநாட்டில் பங்கேற்க உள்ளதாக தெரிவித்துள்ளார். இந்த மாநாட்டில், நாட்டின் வளர்ச்சி குறித்தும், உலகின் தென்பகுதியில் உள்ள வளரும் நாடுகளின் விருப்பங்கள் குறித்தும் அவர் விரிவாக எடுத்துரைக்கிறார்.

தனது பயணத்தை 18-ந்தேதி பாரிஸ் நகரில் நிறைவு செய்வதாக தெரிவித்துள்ள பிரதமர் அங்கு பிரான்ஸ் அதிபர் மேக்ரானுடன் இணைந்து "விவாடெக் 2026" மாநாட்டில் பங்கேற்கிறார். இந்தமாநாட்டில், இந்தியா அமைக்கவுள்ள மாபெரும் அரங்கு, இந்தியா - ஐரோப்பிய நாடுகளின் புத்தாக்கச் சூழல் அமைப்புகளுக்கு இடையேயான ஒத்துழைப்புக்கான மகத்தான வலிமைக்குப் பொருத்தமான அடையாளமாக இருக்கும் என தெரிவித்துள்ளார். மேலும், பாரிசில் வசித்து வரும் இந்திய வம்சாவளியினரைச் சந்திப்பதையும் ஆவலுடன் எதிர்பார்ப்பதாக தெரிவித்துள்ளார்.

பிரான்ஸ், சுலோவாக்கியா நாடுகளில் மேற்கொள்ளும் இந்த பயணம், 3 ஐரோப்பா, ஜி 7 உச்சிமாநாட்டில் பங்கேற்பது போன்றவை, இந்தியாவின் ஈடுபாட்டை வலுப்படுத்தும் என்றும், தொலைதூர நாடுகளுடனான இந்தியாவின் நட்புறவுக்கான எல்லையை விரிவுபடுத்துவதில், உறுதியான அர்ப்பணிப்பை வெளிப்படுத்தும் என்றும் பிரதமர் மோடி அந்த அறிக்கையில் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

# தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் ஜூன் 17ல் எம்.எல்.ஏ.க்கள் கூட்டம்



நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் திமுக படுதோல்வி அடைந்தது இந்த நிலையில் தோல்விக்கான காரணம் குறித்து 36பேர்கொண்டு குழுவினர் கள ஆய்வில் ஈடுபடுத்தப்பட்டு திமுக தலைவர் மு க ஸ்டாலினிடம் அறிக்கைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**17-ம் தேதி திமுக MLA-க்கள் கூட்டம்:**

இந்த நிலையில் வரும் 17ஆம் தேதி மு க ஸ்டாலின் தலைமையில் திமுக எம்எல்ஏக்களின் கூட்டம் நடைபெறும் என்று கட்சி தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து திமுக சட்டப்பேரவை கட்சியின் கொறடா எ.வா . வேலு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது ஜூன் 17ஆம் தேதி மாலை 6:00 மணிக்கு சென்னை அண்ணா அறிவாலயத்தில் உள்ள கலைஞர் அரங்கில் திமுக எம்எல்ஏக்கள் கூட்டம் நடைபெற உள்ளது.

இந்த கூட்டத்தில் அனைத்து திமுக எம்எல்ஏக்களும் தவறாமல் கட்டாயம் பங்கேற்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையில் தமிழக சட்டப்பேரவையின் புதிய கூட்டத்தொடர் ஜூன் 18-ம் தேதி நடைபெறும் உள்ளது. இந்த சூழலில் சட்டப்பேரவையில் முக்கிய விவாதங்களின் போது திமுக உறுப்பினர்கள் சட்டப்பேரவைக்குள் எவ்வாறு ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும், மக்கள் நலன் சார்ந்த பிரச்சினைகளை எப்படி எழுப்ப வேண்டும் என்பது குறித்தும் மு.க.ஸ்டாலின் எம்.எல்.ஏ.க்களுக்கு ஆலோசனைகளை வழங்கவுள்ளார்.

தமிழ்நாடு சட்டப்பேரவையின் புதிய கூட்டத்தொடர் வரும் ஜூன் 18ஆம் தேதி காலை 10 மணிக்கு சென்னை தலைமைச் செயலகத்தில் உள்ள சட்டப்பேரவை மண்டபத்தில் தொடங்க உள்ளது. இந்த கூட்டத்தொடரை தமிழ்நாட்டின் பொறுப்பு ஆளுநர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேக்கர் தனது உரையுடன் தொடங்கி வைக்கிறார்.

கூட்டத்தொடர் எத்தனை நாட்கள் நடைபெறும்என்பதுகுறித்து அலுவல் ஆய்வுக்குழு கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்ட பிறகு அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியாகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆளுநர் உரையின்போது அரசின் கொள்கைகள் மற்றும் எதிர்கால திட்டங்கள் குறித்து முக்கிய அறிவிப்புகள் இடம்பெறலாம்என்பதால்அரசியல் கட்சிகள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது.

மேலும், இந்த கூட்டத்தொடரில் 2026-27 நிதியாண்டிற்கான தமிழக அரசின் முழுமையான பட்ஜெட் தாக்கல் செய்யப்பட உள்ளது. தமிழக வெற்றிக் கழக அரசு பொறுப்பேற்ற பிறகு தாக்கல் செய்யப்படும் முதல் பட்ஜெட் என்பதால், இதில் இடம்பெறவுள்ள நலத்திட்டங்கள், வரி சலுகைகள், வளர்ச்சி திட்டங்கள் மற்றும்புதிய அறிவிப்புகள் குறித்து பொதுமக்கள், தொழில் துறையினர் மற்றும் அரசியல் வட்டாரங்கள் மிகுந்த ஆர்வத்துடன் காத்திருக்கின்றனர். இந்த பட்ஜெட் மாநிலத்தின் அடுத்தகட்ட வளர்ச்சிதிட்டங்களுக்கு முக்கிய திசையை நிர்ணயிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**கூட்டத்தொடருக்கு ஆயுத்தமாகும் திமுக:**

விஜய் தலைமையிலான தவெக அரசு கடந்த மே மாதம் 10 ஆம் தேதி பொறுப்பேற்று ஒரு மாதத்தை நிறைவு செய்துள்ளது. இந்த ஒரு மாதக்காலத்தில் பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்தாலும், தமிழகத்தின்பல்வேறு மாநிலங்களில் மின்வெட்டு பிரச்சனை மற்றும் சட்ட ஒழுங்கு மிகப்பெரியாக உருவெடுத்துள்ளது. மேலும் இது குறித்து திமுக சட்டபேரவையில் நிச்சயம் குரல் எழுப்பும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சட்டமன்றத்தில் தவெக அரசை வலிமையாக எதிர்கொள்ளவும், மக்கள் தரப்பு நியாயங்களை அழுத்தமாகப் பதிவு செய்யவும் திமுக இந்த எம்.எல்.ஏ.க்கள் கூட்டத்தின் மூலம் முழு வீச்சில் ஆயத்தமாகி வருகிறது.

**வரி விளம்பரங்கள்**



தினத்தளம்
DHINATH DHALAM

| | | | |
|---|---|---|---|
| மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள் | |
| கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் | ஆண்டு விழா |
| திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் | நினைவு நாள் | |
| ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் | நகைக்கடன் | |
| வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல் | | |

தொடர்புக்கு : ☎ +919444082959

## அ.தி.மு.க. பொதுக்குழுவை கூட்ட பழனிசாமிக்கு அச்சமா? சி.வி.சண்முகம் சரமாரி கேள்வி



விழுப்புரம் மாவட்டம் திண்டிவனத்தில் அதிமுகவின் சி.வி.சண்முகம் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது தேர்தல் தோல்வி குறித்தும், எடப்பாடி பழனிசாமி மீதும் அடுக்கடுக்கான கேள்விகளை முன்வைத்துள்ளார். அவர் பேசியது பின்வருமாறு;

எம்.ஜி.ஆரால் தொடங்கப்பட்ட இயக்கம் மோசமான நிலையில் சென்றுகொண்டிருக்கிறது. வாக்கு சதவீதமும் குறைந்துகொண்டே வருகிறது.

எடப்பாடி பழனிசாமி தலைமையில் அதிமுக தொடர் தோல்வியை சந்தித்து வருகிறது. சீட்டுக்கட்டு போல அதிமுக சரிந்துகொண்டிருக்கிறது. தேர்தலுக்கு தேர்தல் அதிமுகவின் நன்மதிப்பு குறைந்துகொண்டே வருகிறது. தேர்தல் தோல்வியை எடப்பாடி பழனிசாமி உணரவில்லை. தேர்தலில் அதிமுகவின் தோல்விக்கு பொறுப்பு ஏற்க எடப்பாடி பழனிசாமி மறுக்கிறார். தோல்வி என்றசொல்லை கூட உச்சரிக்க மறுக்கிறார்.

பாமக தயவால்தான் 30 தொகுதிகளில் அதிமுக வெற்றி பெற்றது. பாமக கூட்டணி இல்லையென்றால் தேர்தலில் 7 அல்லது 8 தொகுதிகளிலேயே அதிமுக வென்றிருக்கும். கட்சிக்காக பாடுபட்டவர்களை துரோகி என எடப்பாடி பழனிசாமி கூறுகிறார். கட்சியில் இருந்து கொத்துக்கொத்தாக வெளியேறுகின்றனர். வேதனையுடன் கட்சியில் இருந்து வெளியேறுபவர்களை துரோகி என்பதா? நாங்கள் என்ன விரோதிகளா?

யாருடைய கருத்தையும், ஆலோசனைகளையும் கேட்கமாட்டேன் என சர்வாதிகார போக்குடன் செயல்படுகிறார். எடப்பாடி பழனிசாமிதான் பொதுச்செயலாளர். அனைவரையும் அரவணைத்து செல்ல வேண்டும். கட்சியில் இருந்து அதிமுகவினர் வெளியேறுவதை தடுக்க வேண்டும். தேர்தல் தோல்வி குறித்து விசாரிக்க பொதுக்குழுவை கூட்ட வேண்டும். அதிமுகவை காப்பாற்ற எடப்பாடி பழனிசாமி இறங்கி வர வேண்டும். அனைவரிடமும் கலந்து பேசுங்கள். அதிமுகவை காப்பாற்றவேண்டும்என்பதே எனது வேண்டுகோள். அதிமுக தலைமை சுய பரிசோதனை செய்துகொள்ள வேண்டும். தேர்தலில் அதிமுகவின் தோல்விக்கான காரணத்தை ஆராய வேண்டும். பொதுக்குழுவை உங்கள் விருப்பப்படியே ஒரு தேதியில் கூட்டுங்கள். கட்சியை மீண்டும் வெற்றிப்பாதைக்கு கொண்டு செல்வதற்கான வழிமுறைகள் குறித்து பேச வேண்டும். பொதுக்குழுவை கூட்டவில்லை யென்றால் என்ன செய்ய வேண்டும் என" எங்களுக்கு தெரியும்."

இவ்வாறு அவர் கூறினார்.

**செய்திகள்**
**உடனுக்குடன் படிக்க**

தினத்தளம்
DHINATH DHALAM

**வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்**

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/
CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

தினத்தளம் தினசரி காலை நாளிதழ் 15.06.2026



# மத்தூரில் 'வி த லீடர்' (We The Leader) அமைப்பின் உறுப்பினர் சேர்க்கை கூட்டம்: 50க்கும் மேற்பட்ட இளைஞர்கள் ஆர்வம்

கிருஷ்ணகிரி மாவட்டம், மத்தூரில் தமிழக பாஜக தலைவர் அண்ணாமலையின் புதிய அமைப்பான 'வி த லீடர்' (We The Leader) இயக்கத்தின் புதிய உறுப்பினர் சேர்க்கை மற்றும் ஆலோசனைக் கூட்டம் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு ஒலைப்பட்டி அன்பழகன் தலைமைதாங்கி,நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்தார். மத்தூர் மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த 50க்கும் மேற்பட்ட துடிப்புள்ள இளைஞர்கள் இந்த நிகழ்வில் மிகவும் ஆர்வமுடன் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில்,'வி த லீடர்' அமைப்பின் முக்கிய நோக்கங்கள், எதிர்காலத் திட்டங்கள் மற்றும் சமூகத்தில் இளைஞர்களின் பங்களிப்பு குறித்து விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. குறிப்பாக, அடுத்த தலைமுறைத் தலைவர்களை உருவாக்குதல், சமூக மேம்பாட்டுப் பணிகளில் இளைஞர்களை ஈடுபடுத்துதல் மற்றும் நேர்மையான அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்துதல் போன்ற அமைப்பின் குறிக்கோள்கள் குறித்து தலைவர்கள் விளக்கமளித்தனர்.

இதில் பங்கேற்ற இளைஞர்கள் பலரும் தங்களை இந்த அமைப்பில் புதிய உறுப்பினர்களாக இணைத்துக் கொண்டனர்.


இளைஞர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்ற இந்தச் சிறப்பு கூட்டத்திற்கான ஏற்பாடுகளை வழக்கறிஞர் தமிழ்செல்வன் மற்றும் பர்கூர் சக்தி ஆகியோர் மிகச் சிறப்பான முறையில் செய்திருந்தனர். முடிவில், வந்திருந்த அனைவருக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டது.

மத்தூர் பகுதியில் நடைபெற்ற இந்த உறுப்பினர் சேர்க்கை கூட்டம், அப்பகுதி இளைஞர்களிடையே பெரும் பரபரப்பையும், அரசியல் வட்டாரத்தில் கவனத்தையும் ஈர்த்துள்ளது.

# வாடகை தராததால் ரேஷன் கடைக்கு பூட்டு

## போச்சம்பள்ளி அருகே பரபரப்பு; பொதுமக்கள் ஏமாற்றம்

கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளிஅருகேவாடகை பணம் செலுத்தாததால் ரேஷன் கடையை அதன் உரிமையாளர் வழங்குமாறு கோரியுள்ளார். அதனடிப்படையில், ஆண்டுக்கு 10,000ரூபாயாகஇருந்த வாடகையை 14,000 ரூபாயாக உயர்த்தித் யாளர் சம்மதித்ததை அடுத்து, பூட்டு திறக்கப்பட்டு பொதுமக்களுக்குப் பொருட்கள் விநியோகிக்கப்பட்டன.



பூட்டிய சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இதனால் பொருட்கள் வாங்க வந்த நூற்றுக்கணக்கான பொதுமக்கள் ஏமாற்றத்துடன் திரும்பினர்.

போச்சம்பள்ளி அடுத்த மோட்டுப்பட்டிகிராமத்தில்பகுதி நேர நியாய விலைக்கடை (ரேஷன் கடை) ஒன்று தனியார் கட்டிடத்தில் கடந்த 24 ஆண்டுகளுக்கும் மேலாக இயங்கி வருகிறது. இந்த கடையின் மூலம் மோட்டுப்பட்டி, வெற்றிலைக்கானூர், ஆமணக்கம்பட்டி, சகாதேவன் கொட்டாய், குரும்பர் கொட்டாய், ரத்தினம்கொட்டாய் மற்றும் காவாபுதூர் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 361 குடும்ப அட்டைதாரர்கள் அத்தியாவசியப் பொருட்களைப் பெற்று வருகின்றனர்.

இந்தக் கட்டிடத்திற்கானமாதவாடகையை கடந்த 22 ஆண்டுகளுக்கும் மேலாக கிராம மக்களே தங்களின் சொந்தப் பணத்தில் இருந்து செலுத்தி வந்துள்ளனர். இந்நிலையில், கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு கட்டிடத்தின் உரிமையாளர் வாடகையை உயர்த்தி தர கிராம மக்கள் ஒப்புக்கொண்டுள்ளனர்.

இருப்பினும், கடந்த இரண்டு ஆண்டுகளாக வாடகை பணம் முறையாகச் செலுத்தப்படவில்லை எனக் கூறப்படுகிறது. இதனால் அதிருப்தியடைந்த கட்டிடத்தின் உரிமையாளர், இன்று காலைரேஷன்கடைக்குச்சென்று புதியபூட்டு போட்டு பூட்டினார். வழக்கம்போல் கடையைத் திறக்க வந்த விற்பனையாளர், கடையில் புதிய பூட்டு தொங்குவதைக்கண்டு அதிர்ச்சியடைந்தார். கட்டிட உரிமையாளரிடம் அவர் பேச்சுவார்த்தை நடத்தியும் கடை திறக்கப்படவில்லை. இதனால் காலையிலேயே பொருட்கள் வாங்க காத்திருந்த பொதுமக்கள் கடும் ஏமாற்றத்துடன் வீடு திரும்பும் நிலை ஏற்பட்டது.

இச்சம்பவம் குறித்து போச்சம்பள்ளி வட்ட வழங்கல் அலுவலர் ரகமத்துல்லாவுக்கு தகவல் கொடுக்கப்பட்டது. விரைந்து வந்த அவர்,கட்டிட உரிமையாளரிடம் சமரசப் பேச்சுவார்த்தை நடத்தினார். அதன் விளைவாக,"இன்று ஒரு நாள் மட்டும் கடையைத் திறக்க அனுமதிக்கிறேன்" என உரிமை-

இதுகுறித்து கிராம மக்கள் கூறுகையில், "கடந்த 22 ஆண்டுகளாக நாங்களே சொந்தமாகப் பணம் திரட்டி வாடகை கட்டி வந்தோம். ஆனால் தற்போதைய சூழ்நிலையில் எங்களால் தொடர்ந்து வாடகை செலுத்த இயலவில்லை. எனவே, தமிழக அரசு உடனடியாகத் தலையிட்டு எங்கள் கிராமத்திற்குப் புதிய ரேஷன் கடை கட்டிடத்தைக் கட்டிக் கொடுக்க வேண்டும்" எனகோரிக்கைவிடுத்துள்ளனர்.

இதுகுறித்து வட்ட வழங்கல் அலுவலர் ரகமத்துல்லாவிடம் கேட்டபோது, "இந்த நியாய விலைக்கடை மாவட்ட வழங்கல் அலுவலரின் கட்டுப்பாட்டில் வருகிறது. வாடகை பிரச்சினை தொடர்பாக நாளை (திங்கட்கிழமை) மாவட்ட வழங்கல் அலுவலர் நேரில் வந்து கட்டிட உரிமையாளர் மற்றும் கிராம மக்களிடம் பேச்சுவார்த்தைநடத்திசுமுக தீர்வுகாண்பார்,"என்று தெரிவித்தார். வாடகை தராததால் ரேஷன் கடை பூட்டப்பட்ட சம்பவம் போச்சம்பள்ளி வட்டத்தில் இன்று பெரும் பேசுபொருளாக மாறியுள்ளது

## ஈரோடு மாவட்டத்தில் அமைச்சர்கள் அருண்ராஜ், செங்கோட்டையன், விஜய் பாலாஜி ஆகியோர்

# மருத்துவம், மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலத்துறையின் சார்பில், அரசு மருத்துவக்கல்லூரியில் பயின்ற மாணவர்களுக்கு பட்டங்களை வழங்கினர்



மருத்துவம், மருத்துவக்கல்விமற்றும்குடும்ப நலத்துறையின் சார்பில், மருத்துவம், மருத்துவக்கல்வி மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் மரு.கே.ஜி.அருண்ராஜ் மற்றும் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் மற்றும் கைத்தறி, துணிநூல் மற்றும் காதித்துறை அமைச்சர் ம.விஜய் பாலாஜி ஆகியோர் அரசு மருத்துவக்கல்லூரியில் பயின்ற மாணவ, மாணவியர்களுக்கு பட்டங்களை வழங்கினார்கள்.

ஈரோடு மாவட்டம், பெருந்துறை, அரசு ஈரோடு மருத்துவக் கல்லூரி கலையரங்கில் நேற்று(14.06.2026)மருத்துவம், மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலத்துறையின் சார்பில், மருத்துவம், மருத்துவக்கல்வி மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் மரு. கே.ஜி.அருண்ராஜ் மற்றும் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் மற்றும் கைத்தறி, துணிநூல் மற்றும் காதித்துறை அமைச்சர் ம.விஜய் பாலாஜி ஆகியோர் அரசு மருத்துவக்கல்லூரியில் பயின்ற மாணவ, மாணவியர்களுக்கு பட்டங்களை வழங்கி வாழ்த்துக்களை தெரிவித்தார்கள். மருத்துவம், மருத்துவக்கல்வி மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் அவர்கள் பேசும்போது தெரிவித்ததாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் பல்வேறு அரசு திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார். அந்த வகையில் நேற்றைய தினம் மருத்துவ மாணவர்களுக்கு பட்டமளிப்பு விழா சிறப்பாக நடைபெற்று வருகிறது. மருத்துவத் துறை என்பது மனிதநேயத்துடன் கூடிய உயரிய சேவையாகும். பட்டம் பெறும் இளம் மருத்துவர்கள் அர்ப்பணிப்பு உணர்வுடன் பொதுமக்களுக்கு தரமான மருத்துவ சேவையை வழங்க வேண்டும். மருத்துவ பயனாளர்களை அன்புடனும் கருணையுடனும் அணுகி, அவர்களின் நம்பிக்கையைப் பெறுவதே ஒருசிறந்தமருத்துவரின் அடையாளமாகும். இன்று பட்டம் பெறும் மாணவர்கள் தங்களது அறிவையும் திறமையையும் நாட்டின் முன்னேற்றத்திற்கும் மக்களின் நலனிற்கும் பயன்படுத்த வேண்டும். மருத்துவத் துறையில் புதிய ஆராய்ச்சிகள் மற்றும் தொழில்நுட்பங்களை கற்றுக்கொண்டு, தொடர்ந்து தங்களை மேம்படுத்திக் கொள்ள வேண்டும். உங்களது எதிர்காலப் பயணம் வெற்றிகரமாக அமைய வேண்டும் என தெரிவித்தார்.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் பேசும்போது தெரிவித்ததாவது, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு முதலமைச்சராக பதவி ஏற்றவுடன் பொதுமக்களின் நலன் கருதி தன்னுடைய முதல் கையெழுத்தான 200யூனிட் இலவசம் மின்சாரம் வழங்கும் திட்டம், சிங்கப் பெண்சிறப்பு அதிரடி படை, போதைப்பொருள் தடுப்புப்படை ஆகிய கோப்புகளில் கையெழுத்திட்டு, துவக்கிவைத்துசிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் நேற்றைய தினம் மருத்துவ மாணவர்களுக்கு பட்டமளிப்பு விழா சிறப்பாக நடைபெற்று வருகிறது.நேற்று நாம் மருத்துவராக இருப்பதற்கு முக்கிய காரணம் அரசு மருத்துவமனைகளுக்கு சிகிச்சைக்காக வந்த மருத்துவ பயனாளர்கள் மட்டுமே, அவர்களை பரிசோதித்து அவர்களிடமிருந்து கற்றுக்கொண்டு அவர்களின் ஒத்துழைப்பின் மூலமாகவே மருத்துவ அறிவையும் அனுபவத்தையும் பெற்றுள்ளோம்.எனவே, சமூகத்திற்கு திருப்பிச் செலுத்த வேண்டிய கடமையும் பொறுப்பும் ஒவ்வொரு மருத்துவருக்கும் இருக்க வேண்டும் என தெரிவித்தார்.

கைத்தறி, துணிநூல் மற்றும் காதித்துறை அமைச்சர் பேசும்போது தெரிவித்ததாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் ஆணைக்கிணங்க,நேற்றைய தினம் மருத்துவ மாணவர்களுக்கு பட்டமளிப்பு விழா சிறப்பாக நடைபெற்று வருகிறது. புத்தக அறிவு மட்டுமின்றி அனுபவம், மனிதநேயம் மற்றும் ஞானமும் ஒரு சிறந்த மருத்துவரின் அடையாளங்கள். பட்டம் பெறும் மாணவர்கள் ஹிப்போக்ரட்டிக் உறுதிமொழியின் அர்த்தத்தை உணர்ந்து மருத்துவ நெறிமுறைகளை கடைப்பிடித்து நேர்மையுடனும் பொறுப்புடனும் சேவையாற்றவேண்டும். எனவே, மருத்துவத் துறையின் புனிதத்தன்மையை உணர்ந்து, அதன் மேன்மையை நிலை நிறுத்தும் வகையில் செயல்பட வேண்டும். உங்கள் சேவையின் மூலம் மருத்துவத் துறைக்கும் சமூகத்திற்கும் மேலும் புகழ் சேர்க்க வேண்டும் என தெரிவித்தார்.

நேற்றைய தினம், நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் அனைத்து மருத்துவ மாணவ, மாணவியர்களும் பட்டமளிப்பு உறுதிமொழியினை ஏற்றுக்கொண்டனர். தொடர்ந்து, 114 பாராட்டுச்சான்றிதழ்களையும் வழங்கினார்கள். மாணவ, மாணவியர்களுக்கு பட்டங்கள் மற்றும்

முன்னதாக, மருத்துவம், மருத்துவக்கல்வி மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் மற்றும் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர்மற்றும்கைத்தறி, துணிநூல் மற்றும் கதர்த்துறை அமைச்சர் அவர்கள் ஆகியோர் உலக ரத்த கொடையாளர்கள் தினத்தை முன்னிட்டு,மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி உட்பட 17 ரத்த கொடையாளர்களுக்கு கேடயம் மற்றும் பாராட்டு சான்றிதழ்களையும் வழங்கி வாழ்த்துக்களை தெரிவித்தார்கள்

இந்நிகழ்ச்சியின் போது, மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, திருப்பூர் சட்டமன்ற உறுப்பினர் வி.சத்தியபாமா, ஈரோடு மேற்கு சட்டமன்ற உறுப்பினர் கா.க.ஆனந்த் மோகன், மொடக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் டி.சண்முகன், பவானிசாகர் சட்டமன்ற உறுப்பினர் வி.பி.தமிழ்ச்செல்வி, அரசு ஈரோடு மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனையின் முதல்வர் மரு.த.ரவிக்குமார், கல்லூரி பேராசிரியர்கள், மருத்துவர்கள், மற்றும் மாணவ மாணவியர்கள் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## கோவையின் புதிய அடையாளமாக குரோசர் சென்ட்ரல் துவக்கவிழா:

# பிரபல ஹரிபவனம் நிறுவனத்தின் சார்பாக 'குரோசர் சென்ட்ரல்' எனும் சூப்பர் மார்க்கெட் துவக்கவிழா நிகழ்ச்சி

## கோவை விமான நிலையம் அருகே நடைபெற்றது




கோவையைச் சேர்ந்த முன்னணி உணவக நிறுவனமான ஹரிபவனம் ரெஸ்டாரண்ட்ஸ்இந்தியாபிரைவேட்லிமிடெட், உணவகத் துறையில் 50 ஆண்டுகளுக்கும் மேலாக சிறப்பாக செயல்பட்டு வருகின்றது.

இந்த நிலையில், தற்போது தனது புதிய முயற்சியாக 'குரோசர் சென்ட்ரல்' என்ற நவீன சூப்பர் மார்க்கெட்டை தொடங்கியுள்ளது. இது குறித்து ஹரிபவனம் ரெஸ்டாரண்ட்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் பாலச்சந்தர் ராஜு செய்தியாளர்களிடம் கூறியதாவது, ஐந்து தசாப்தங்களுக்கும் மேலாக உணவகத் துறையில் வாடிக்கையாளர்களின் நம்பிக்கையைப் பெற்று செயல்பட்டு வருகிறோம். எங்கள் உணவகங்களில் எப்போதும் தரமான மூலப்பொருட்களைப் பயன்படுத்தி சுவையான மற்றும் சுகாதாரமான உணவுகளை வழங்கி வருகிறோம். அதே தரத்தையும் நம்பகத்தன்மையையும் தற்போது உணவு சமைக்க தேவையான பொருட்கள் மற்றும் வீட்டிற்கு பொருட்களை குரோசர் சென்ட்ரல் மூலம் நேரடியாக மக்களின் இல்லங்களுக்கு கொண்டு செல்ல உள்ளோம். உணவு சமைப்பதற்குத் தேவையான அரிசி, பருப்பு, சர்க்கரை, மசாலா பொருட்கள், தினசரி பசுமையான காய்கறிகள் மற்றும் பழங்கள், இறைச்சி வகைகள் உள்ளிட்ட அனைத்து அத்தியாவசியப் பொருட்களையும் ஒரே இடத்தில் தரமான முறையில் வழங்க உள்ளோம். கோவை மக்களுக்கு ஒரு சாதாரண சூப்பர் மார்க்கெட்டை விட, குடும்பத்தின் அனைத்து தேவைகளையும் பூர்த்தி செய்யும் முழுமையான ஷாப்பிங் மையத்தை உருவாக்குவதே எங்களின் நோக்கம். தரமான பொருட்கள், நியாயமான விலை, சிறந்த சேவை மற்றும் தொழில்நுட்ப வசதிகளை ஒருங்கிணைத்து புதிய ஷாப்பிங் அனுபவத்தை வழங்க உள்ளோம், என்றார். மேற்கத்திய நாடுகளின் நவீன சூப்பர் மார்க்கெட்டுகளுக்கு இணையான உட்புற வடிவமைப்புடன் அமைக்கப்பட்டுள்ள குரோசர் சென்ட்ரல், சுமார் 25,000 சதுர அடி பரப்பளவில், கிட்டத்தட்ட ஒரு ஏக்கர் வளாகத்தில்,இரண்டு தளங்களுடன் உருவாக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார். இந்த நிகழ்ச்சியில்

ஹரிபஹவனம் குழுமத்தின் தலைவர் பாலசந்தர், குரோசர் சென்ட்ரல் இயக்குனர்கள் கவிதா பாலசந்தர், ஹரிணி பாலசந்தர், பிரியங்கா ராஜு, மற்றும் அவரது குடும்பத்தினர் ருக்மணி, சுப்பு லக்ஷ்மி, அங்கப்ப கவுண்டர், சபரிநாதன் மற்றும் சுரேஷ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## தமிழக முற்போக்கு மக்கள் கட்சியின் சார்பாக

# கோவை சிவாஜி காலனி பகுதியில் டாஸ்மாக் கடை முற்றுகை போராட்டம் அறிவித்திருந்த நிலையில், 15 நாட்களுக்குள் கடையை காலி செய்வதாக டாஸ்மாக் நிர்வாகம் உறுதி

### தற்காலிகமாக போராட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது



தமிழகத்தில் கடந்த 20 ஆண்டுகளாக, தமிழக முற்போக்கு மக்கள் கட்சி செயல்பட்டு வருகின்து. இதன் மாநில தலைவராக வழக்கறிஞர் சக்தி வேல் இருந்து வருகின்றார். இவரது தலைமையில்

கோவை சிவாஜி காலனி பகுதியில் தமிழக முற்போக்கு மக்கள் கட்சியின் கோவை மண்டல அலுவலகம் அமைந்துள்ளது. இங்கு இக்கட்சியின் மாநில துணைத் தலைவரும் வழக்கறிஞருமான புஸ்பாணந்தம் செய்தியாளர்களை சந்தித்து பேசினார் அப்பொழுது அவர் கூறியதாவது.,கோவைகோவில் மேடு பகுதியில் பேருந்து நிலையம் அருகே, 100 மீட்டருக்குள் உள்ள டாஸ்மாக் கடைகளை இடமாற்றம் செய்ய வேண்டும். இந்த கடைக்கு அருகே ஒரு தனியார் மருத்துவமனை உள்ளது இந்த கடையால் பல்வேறு நோயாளிகளுக்கும், பொதுமக்களுக்கும் இடையூறாக இருந்து வருகின்றது எனவே இந்த கடையை உடனடியாக அரசு மூடி, இடமாற்றம் செய்து பொதுமக்கள், மற்றும் மருத்துவமனை நோயாளிகளை காக்க வேண்டும். அவ்வாறு செய்யாத பட்சத்தில் அடுத்த வரும் 15ம் தேதி கோவில் மேடு பகுதியில், உள்ள டாஸ்மாக் கடைக்கு எதிராக பொதுமக்களை திரட்டி மறியல் போராட்டம் நடத்த படும் கடந்த சில நாட்களுக்கு முன்னர் தமிழக முற்போக்கு மக்கள் கட்சி அறிவிப்பு விடுத்திருந்தது. இது சம்பந்தமாக டாஸ்மாக் மண்டல மேலாளர், மற்றும் மாவட்ட ஆட்சியரிடமும் மனு அளிக்க பட்டது. இந்த மனுவை விசாரித்த டாஸ்மாக் மண்டல மேலாளர் தமிழக முற்போக்கு மக்கள் கட்சி சார்பாக விடுக்க பட்ட கோரிக்கையை ஏற்றுடாஸ்மாக்கடையை இடமாற்றம் செய்ய முடிவு செய்துள்ளது. அதற்க்காக 15 நாட்கள் கால அவகாசம் தேவை என கடிதம் மூலம் பதில் தெரிவித்துள்ளது இதனால்அறிவித்தபோராட்டம் தற்காலிகமாக ஒத்தி வைக்க பட்டுள்ளது. 15 நாட்களில் டாஸ்மாக் கடை மாற்றம் செய்யாத நிலையில் மீண்டும் போராட்டம் நடத்த படும் என்று தெரிவித்துள்ளார்

இந்த நிகழ்ச்சியில் வழக்கறிஞர் குமாஸ்தா செல்வராஜ், குனியமுத்தூர் இ-சேவை மையம் சார்பாக மோகன், மேட்டுப்பாளையம் தொகுதி, விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மாவட்ட துணை செயலாளர் சந்திரன், அதிமுக முன்னாள் வட்டச்செயலாளர் மோகன் காந்தி, உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஈரோடு மாவட்டத்தில் மருத்துவம், மருத்துவக்கல்வி மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் கே.ஜி.அருண்ராஜ்

# பெருந்துறை, அரசு ஈரோடு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையினை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்

ஈரோடு மாவட்டம், பெருந்துறை, அரசு ஈரோடு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில் இன்று (14.06.2026) மருத்துவம், மருத்துவக்கல்வி மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் மரு.கே.ஜி. அருண்ராஜ் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.



இந்த ஆய்வின்போது, அரசு ஈரோடு மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனையில் பராமரிக்கப்பட்டு வரும் பதிவேடுகள், மருந்தகம், மருந்து இருப்பு, ஆய்வகம், அவசர சிகிச்சை பிரிவு, படுக்கை வசதி, கழிப்பறை, புற மருத்துவ பயனர்களுக்கு வழங்கப்படும் சிகிச்சை முறை, வாகன நிறுத்துமிடம், சுற்றுப்புறத்தூய்மை குறித்து ஆய்வு மேற்கொண்டு, மருத்துவ பயனர்களுடன் மருத்துவர்கள் வழங்கும் சிகிச்சை முறைகள் குறித்து கேட்டறிந்தார். மேலும், மருத்துவ தினசரி வருகை தரும் மருத்துவ பயனர்கள் விபர பதிவேடு, மருத்துவ கருவிகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் பயன்பாடு. மருத்துவ பணியாளர்கள் விபரம், பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்ட விபரம் மற்றும் தொடர் கண்காணிப்பு பணிகள், மருத்துவ பயனாளர்களுக்கு உணவு தயார் செய்யும் உணவு கூடம், பொது பிரிவு உள்ளிட்டவை குறித்து ஆய்வு மேற்கொண்டு மருத்துவமனை மற்றும் அதன் சுற்றுப்புறங்களை சுத்தமாகவும், சுகாதாரமாகவும் வைத்திருக்குமாறு மருத்துவ அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

தொடர்ந்து, அரசு ஈரோடு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில் ரூ.34 கோடி மதிப்பீட்டில் கட்டுப்பட்டுள்ள 100 படுக்கை அறைகள் வசதிகள் கொண்டு அமைக்கப்பட்டுள்ள கட்டிடத்தினை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது, மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி, ஈரோடு மேற்கு சட்டமன்ற உறுப்பினர் கா.க.ஆனந்த் மோகன், மொடக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் டி. சண்முகம், அரசு ஈரோடு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையின் முதல்வர் மரு.த.ரவிக்குமார், உட்பட துறைசார்ந்த அலுவலர்கள் உடன் இருந்தனர்.

## ஓட்டப்பிடாரம் தாலுகா அலுவலகத்தில் தனி மாவட்ட வருவாய் அலுவலர்

# சிப்காட் சங்கரலிங்கம் தலைமையில் நடந்த ஜமாபந்தியில் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது



ஓட்டப்பிடாரம் தாலுகா அலுவலகத்தில் ஜமாபந்தி கடந்த 2 தேதி தொடங்கி முடிவடைந்தது

இதில் பசுவந்தனை பரிவல்லிகோட்டை ஓட்டப்பிடாரம் எப்போதும் வென்றான் வேடநத்தம் மணி யச்சி குறு வட்டங்களைச் சேர்ந்த கிராம பொதுமக்கள் கலந்து கொண்டு கோரிக்கை மனுக்களை அளித்தனர் சிப்காட் தனி மாவட்ட வருவாய் அலுவலர் சங்கரலிங்கம் தலைமை வகித்து பொதுமக்களிடம் மனுக்களை வாங்கினார் மொத்தம் 715 மனுக்கள் பெறப்பட்டு 152 மனுக்களுக்கு உடனடி தீர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது

இன்று நடந்த ஜமாபந்தி நிறைவு நாளில் ஓட்டப்பிடாரம் புதியம்புத்தூர் சில்லாநத்தம் ஆகிய கிராமங்களை சேர்ந்த பொதுமக்கள் கலந்து கொண்டு 135 மனுக்களை வழங்கினர்

இன்று ஜமாபந்தியில் 8 நபர்களுக்கு உழவர் பாதுகாப்பு திட்டத்த்தின் கீழ் ரூ 165000 மதிப்பில் இறப்பு நிவாரணம் ஆணை 1 நபருக்குதற்காலிக நிவாரணம் 2 நபர்களுக்கு வாரிசு சான்றிழ் 11 நபர்களுக்கு பட்டா பெயர் மாற்றம் இ பட்டா வழங்கப்பட்டது

நிகழ்ச்சியில் சிப்காட் தனி வட்டாட்சியர் சந்திரன் ஓட்டப்பிடாரம் வட்டாட்சியர் அய்யனார் சமூக பாதுகாப்பு திட்ட வட்டாட்சியர் இசக்கிராஜ் துணை வட்டாட்சியர்கள் மரியவியாகுல ஜெயா , மாரிமுத்து மற்றும் வருவாய் ஆய்வாளர்கள் கிராம நிர்வாக அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்

# மங்களூர் கிழக்கு ஒன்றியத்தில் முன்னாள் அமைச்சர் சி.வி. கணேசனின் நன்றி அறிவிப்பு சுற்றுப்பயணம்



கடலூர் மேற்கு மாவட்ட கழக செயலாளரும், முன்னாள் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சரும், திட்டக்குடி சட்டமன்ற உறுப்பினருமான மாண்புமிகு சி.வெ. கணேசன் அவர்கள், திட்டக்குடி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட மங்களூர் கிழக்கு ஒன்றியம் முழுவதும் உள்ளவாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் அதர்நத்தம், ஆலம்பாடி, ஆவட்டி, அ.குடிகாடு, கனகம்பாடி, ஜவனூர், கீழ்ஆதனூர், மேல் ஆதனூர், கீரனூர், புலிவலம், பெறுமுளை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளுக்கு நேரில் சென்று பொதுமக்களை சந்தித்து தனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொண்டார். மங்களூர் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் பட்டூர் அமிர்தலிங்கம், கடலூர் மேற்கு மாவட்ட அயலக அணி அமைப்பாளர் சேதுராமன், கடலூர் மேற்கு மாவட்ட இளைஞரணி துணைச்செயலாளர் பாரதிராஜா மற்றும் கழக நிர்வாகிகள் பலர் பங்கேற்றனர்.

# கடையநல்லூரில் புதிய இஸ்லாமிய கல்வி நிலையம் மற்றும் பள்ளிவாசல் திறப்பு விழா



கடையநல்லூரில் புதிய இஸ்லாமிய கல்வி நிலையம் மற்றும் பள்ளிவாசல் திறப்பு விழா இஸ்லாம் ஓர் இனிய மார்க்கம் தந்த பிஜே பங்கேற்பு

தென்காசி மாவட்டம் கடையநல்லூரில்தேசிய தவ்ஹீத் கூட்டமைப்பு (NTF) சார்பாக கடையநல்லூர் ரஹ்மானியாபுரம் 11 வது தெருவில் மத்ரஸத்துல் ஃபாத்திமா என்ற இஸ்லாமிய கல்வி நிலையம் புதியஜும்ஆ மர்கஸ்திறப்புநிகழ்ச்சி கடந்த வெள்ளி 12/06/2026 அன்று நடைபெற்றது! இதில் மார்க்கஅறிஞர்தேசிய தவ்ஹீத் கூட்டமைப்பு நிறுவனத் தலைவர் பீ. ஜைனுல் ஆபிதீன் அவர்கள் கலந்து கொண்டு ஜும்ஆ பேருரை நிகழ்த்தினார்கள்.

சகோதரர் பீ.ஜே அவர்கள் தனது ஜும்ஆ உரையில் பள்ளிவாசல் அமைவதின் முக்கியத்துவத்தையும், குர்ஆன் ஹீத்ஸ் அடிப்படையில் செயல்பட வேண்டிய அவசியத்தையும் விளக்கினார்கள்! மேலும் அல்லாஹ் இந்த மகத்தான நற்பணியைஏற்றுக்கொள்ளவும், பள்ளிவாசல் இறுதி வரை ஏகத்துவ கொள்கையில் நிலைத்து நிற்க அனை வரும் பிரார்த்தனை செய்யுமாறும்கேட்டுக் கொண்டார்கள். தொழுகையை தேசிய தவ்கீத் கூட்டமைப்பு என் டி எப் மாநில செயலாளர் சதாம் ஹூசைன் நடத்தினார். இந்நிகழ்சியில் பெருந்திரளாக மக்கள் கலந்து கொண்டார்கள். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை ரஹ்மானியாபுரம் தவ்ஹீத் பேரவை தேசிய தவ்ஹீத் கூட்டமைப்பு நிர்வாகிகள் செய்திருந்தனர்.

## சிறந்ததைத் தேர்ந்தெடுத்து, சிறந்ததை உண்ணுங்கள்:

# கோயம்புத்தூரில் நடிகை கீர்த்தி சுரேஷ் பங்கேற்ற ஃபியோனா நிறுவனத்தின் பிரம்மாண்ட விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது




கோயம்புத்தூரில் ஃபியோனா சுத்திகரிக்கப்பட்ட சூரியகாந்தி எண்ணெய் நிறுவனம் சார்பில், தமிழ்நாடு முழுவதிலுமிருந்துவந்திருந்தஅதன் வணிகப் பங்காளர்களுக்கான சிறப்புக் கூட்டம் மற்றும் ஆரோக்கிய விழிப்புணர்வு நிகழ்ச்சி பிரம்மாண்டமாக நடைபெற்றது. இந்த விழாவில் ஃபியோனா நிறுவனத்தின் பிராண்ட் தூதரும், தேசிய விருது பெற்ற பிரபல நடிகையுமான கீர்த்தி சுரேஷ் மற்றும் பங்க் இந்தியா நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் சந்தீப் சிங் ஆகியோர் நேரில் கலந்து கொண்டனர்.

இன்றைய காலகட்டத்தில் நுகர்வோர் பலரும் உணவுப் பொருட்களின் ஊட்டச்சத்துக்கள் குறித்து அதிக கவனம் செலுத்தினாலும், அன்றாட சமையலுக்குப் பயன்படுத்தும் எண்ணெய் தேர்வில் போதிய கவனம் செலுத்துவதில்லை. குடும்ப ங்களின் ஆரோக்கியத்தில் சமையல் எண்ணெயின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் வகையில், "சிறந்ததைத் தேர்ந்தெடுங்கள், சிறந்ததை உண்ணுங்கள்" என்ற தத்துவத்தின் கீழ் இந்த விழிப்புணர்வு முயற்சி முன்னெடுக்கப்பட்டது.

நிகழ்ச்சியில் பேசிய நடிகை கீர்த்தி சுரேஷ், " என்னைப்பொறுத்தவரை உணவு என்பது எப்போதும் குடும்பம் மற்றும் மகிழ்ச்சியுடன் இணைந்தது. மக்கள் தங்களுக்குப் பிடித்த சுவைகளையும் பாரம்பரிய உணவுகளையும் கைவிடச் சொல்லாமல், அந்த உணவுகள் எவ்வாறு ஆரோக்கியமான முறையில் தயாரிக்கப்படுகிறது என்பதில் அதிக கவனம் செலுத்த ஃபியோனா நிறுவனம் ஊக்குவிக்கிறது. அன்றாட சமையலில் நாம் செய்யும் சிறிய நல்ல மாற்றங்களே ஆரோக்கியமான வாழ்க்கைக்கு அடித்தளம்" என்று குறிப்பிட்டார்.

பேசிய நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் சந்தீப் சிங், "சமையலறையில் நாம் ஒவ்வொரு நாளும் எடுக்கும் முடிவுகள், காலப்போக்கில் நமது ஆரோக்கியத்தில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும். நுகர்வோர் விழிப்புணர்வுடன் நல்ல முடிவுகளை எடுக்கவே நாங்கள் விரும்புகிறோம்" என்றார்.

மேலும், ஃபியோனா சூரியகாந்தி எண்ணெயில் உள்ள 'விட்டோ ப்ரொடெக்ட் ஃபார்முலா' (Vito Protect Formula), சாதாரண எண்ணெய்களை விட உணவுக்கு வைட்டமின்கள் கடத்தப்படுவதை 50% வரை அதிகரிக்க உதவுகிறது என்பதும் இந்த நிகழ்வில் குறிப்பிடத்தக்க அம்சமாக எடுத்துரைக்கப்பட்டது. தமிழ்நாடு முழுவதும் உள்ள நுகர்வோருடன் ஆரோக்கியமான உறவை வலுப்படுத்தும் நோக்கில் இந்த சிறப்பான விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தி முடிக்கப்பட்டுள்ளது.

DHINATH DHALAM Morning Tamil Daily 15.06.2026

# சேலத்தில் 302 கிலோ குட்கா பறிமுதல் ஒருவர் கைது

சேலம்: தடை செய்யப்பட்ட போதை பொருட்களை கடத்தி வந்த நபர் கைது செய்யப்பட்டு, அவரிடம் இருந்து 302



கிலோ எடையுள்ள குட்கா மூட்டைகளை காவல் துறையினர் பறிமுதல் செய்துள்ளனர்.

அரசால் தடைச் செய்யப்பட்ட போதைப்பொருட்கள் விற்பனை மற்றும் விநியோகத்தை முற்றிலும் ஒழிக்கும் வகையில்,முதலமைச்சர் விஜய் தலைமையிலான தமிழ்நாடு அரசு பல்வேறு நடவடிக்கைளை முடுக்கிவிட்டு உள்ளது.

அந்தவகையில்,சேலம் மாநகரத்தில் பல்வேறு பகுதிகளில் காவல்துறையினர் நடைரோந்து மேற்கொண்டு குற்ற நடவடிக்கைகளைக் கண்காணித்து வருகின்றனர். அத்துடன், குற்ற நிகழ்வுகளைத் தடுக்கும் பொருட்டு காவல்துறையினர், நடைரோந்து சென்று பொதுமக்களிடம்விழிப்புணர்வை ஏற்படுத்துகின்றனர்.

அதன் தொடர்ச்சியாக, சேலம் மாநகரம், அம்மாப்பேட்டை குமரகிரி ஏரி பகுதியில் புகையிலைப் பொருட்களை விற்பனைச் செய்வதாக அம்மாப்பேட்டை காவல்துறையினருக்கு ரகசிய தகவல் கிடைத்துள்ளது. அதனைத் தொடர்ந்து, அந்த பகுதிக்கு விரைந்துச் சென்ற காவல்துறையினர், காரில் இருந்த ஒருவரைப் பிடித்து விசாரணை நடத்தினர்.

அப்போது அந்த நபர் முன்னுக்குப் பின் முரணான வகையில் பதிலளித்துள்ளார். இதனால் சந்தேகமடைந்த காவல்துறையினர், அவரது காரை தீவிர சோதனைக்கு உட்படுத்தியுள்ளனர். அப்போது காரில் மூட்டை மூட்டையாக சுமார் 302 கிலோ அளவிலான புகையிலைப் பொருட்களைப் பதுக்கி வைத்திருப்பது தெரிய வந்தது.

இதையடுத்து, அவரை கைது செய்த காவல்துறையினர், குட்கா மூட்டைகளையும், கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட காரையும் அதிரடியாகப் பறிமுதல் செய்தனர். பின்னர் அவரை காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று விசாரணை நடத்தினர்.

அதில், சேலம் மணியனூர் பகுதியைச் சேர்ந்த முகமது சுலைமான் என்பதும், வெளிமாநிலங்களில் இருந்து புகையிலைப் பொருட்களைக் கடத்தி வந்து சேலத்தில் உள்ள மளிகைக் கடைகளில் அதிக விலைக்கு விற்பதும் தெரிய வந்தது. மேலும் சிறுவர்களுக்கு விற்பனை செய்து வந்ததும் கண்டுபிடிக்கப்பட்டது.

இதையடுத்து, முகமது சுலைமான் மீது வழக்குப்பதிவுச் செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைப்பதற்கான நடவடிக்கைகளை காவல்துறையினர் மேற்கொண்டுள்ளனர். அதேபோல், குட்கா பொருட்களை எங்கிருந்து வாங்கினார்? எந்தெந்த கடைகளுக்கு விற்பனை செய்து வருகிறார்? என்பது குறித்தும் அவரிடம் துருவி துருவி காவல்துறையினர்விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

குட்கா மூட்டைகள் பிடிபட்ட சம்பவம், அம்மாப்பேட்டைபகுதி மக்களிடையே பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# Woman falls to death while bungee jumping in Brazil as crew forgets to attach safety rope, video surfaces

*A footage of the incident, which took place in São Paulo's Limeira, has surfaced on social media, wherein the crew is seen carrying the woman to the*



*edge. A 21-year-old woman lost her life while bungee jumping in Brazil, after the crew allegedly "forgot" to attach the safety rope before she was plunged from the bridge.*

*A footage of the incident, which took place in São Paulo's Limeira, has surfaced on social media, wherein the crew is seen carrying the woman, identified as Maria Eduarda Rodrigues de Freitas. Videos taken from various angles and posted on X show the crew calmly carrying the woman to the edge of the Skeleton Bridge, before hurling her over.*

*Meanwhile, the rope is kept on the floor, and can be clearly seen as not being attached to her body. Bystanders can be heard realising this a split second after she is thrown. Maria was thrown at least 130 feet from above, according to the Daily Mail.*

*Emergency services called, six people held*

*Witnesses said that the bungee crew had forgotten to connect the safety equipment to Maria prior to her jump on Saturday morning, The Sun cited the military police as saying. Emergency services were called in after the incident. However, the woman was pronounced dead at the scene.*

*Her body was recovered by the personnel and sent to the Legal Medical Institute for further investigation, according to the Daily Mail. Meanwhile, at least six people were arrested in connection with the incident. The civil police said they would probe the matter further and determine whether any criminal charges can be brought against the accused.*

*Victim posted photographs from site*

*The 21-year-old had allegedly posted photographs of her jump wristbands and the bridge on her social media handle from the site, right before the activity. In a series of stories, Maria also revealed the location of the bungee jumping, and took pictures of representatives of the company, named "Entre Cordas", who were handling the activity, according to The Sun. The staff in the pictures were seen wearing T-shirts with the company names.*

*One of the photographs she posted on Instagram was captioned, "Who was the crazy person who let me come jump off a bridge?" In a video taken of the moments after she was thrown, bystanders can he heard shouting frantically in the background, "the rope, people, the rope."*

*The company responsible for conducting the activity was allegedly charging £26.50 ($35.42) for people to bungee jump from the bridge, and had five other dates advertised for the coming months, The Sun reported.*

ஈரோடு மாவட்டம் கோபிசெட்டிபாளையம் பயணியர் மாளிகையில்

# விசைத்தறி சங்கங்களின் கூட்டமைப்பின் நிர்வாகிகள் அமைச்சர் செங்கோட்டையனிடம் கோரிக்கை மனு அளித்தனர்

ஈரோடு மாவட்டம் கோபிசெட்டிபாளையம் பயணியர் மாளிகையில் தமிழ்நாடு விசைத்தறி சங்கங்களின் கூட்டமைப்பின் நிர்வாகிகள், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சரும், ஈரோடு மாவட்ட பொறுப்பு அமைச்சருமான கே.ஏ. செங்கோட்டையனை நேரில் சந்தித்து கோரிக்கை மனு அளித்தனர்.

கடந்த ஜூன் 5 அன்று நடைபெற்ற தமிழ்நாடு விசைத்தறி சங்கங்களின் கூட்டமைப்பின் மாநில செயற்குழு கூட்டத்தில் பல்வேறு முக்கிய தீர்மானங்கள் நிறைவே ற்றப்பட்டன. இந்ததீர்மானங்கள் அடங்கியகோரிக்கை மனுவை ஈரோடு, சித்தோடு, வீரப்பன்சத்திரம், லக்காபுரம், சென்னிமலை, திருச்செங்கோடு, நாமக்கல், சேலம், எடப்பாடி, ஜலகண்டாபுரம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த விசைத்தறி உரிமையாளர்கள் சங்க நிர்வாகிகள் அமைச்சரிடம் நேரில் வழங்கினர்.



நிர்வாகிகள் அளித்த மனுவில் உள்ள அனைத்து விபரங்களையும் பொறுமையுடன் படித்துப்பார்த்தஅமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன், இது தொடர்பாக உரிய ஆலோசனைகளை மேற்கொண்டார். மேலும், இந்த கோரிக்கைகளை முதலமைச்சரின் கவனத்திற்கு கொண்டு செல்வதாகவும், துறை சார்ந்த மற்ற அமைச்சர்களுடன் கலந்தாலோசித்து விசைத்தறி தொழிலாளர்களின் கோரிக்கைகள் மீது உரிய நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதி அளித்துள்ளார்.

முன்னதாக,அமைச்சர் செங்கோட்டையனை சந்திப்பதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்து, நிர்வாகிகளுடன் நேரில் வந்து கோரிக்கைகளை அமைச்சரிடம் எடுத்துரைக்க உதவிய மொடக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் சண்முகத்திற்கு, தமிழ்நாடு விசைத்தறி சங்கங்களின் கூட்டமைப்பின் சார்பாக நன்றிகள் தெரிவிக்கப்பட்டது.

திருவள்ளூர் மாவட்டத்தில் மூடப்பட்ட சமூகநீதி விடுதிகளை மீண்டும் திறக்க

# திருவள்ளூர் கலெக்டர் எஸ்.கவிதாவிடம் தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர் சார்பில் நிறுவனத்தலைவர் சா.அருணன் கோரிக்கை

திருவள்ளூர் மாவட்டத்தில மூடப்பட்ட சமூக நீதி விடுதிகளை மீண்டும் திறக்க திருவள்ளூர் மாவட்ட ஆட்சித்தலைவர் எஸ்.கவிதா அவர்களிடம் தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர் சார்பில் நிறுவனத் தலைவர் சா.அருணன் கோரிக்கை வைத்தார். மனு குறிப்பிட்டுள்ள. கோரிக்கைகள் விவரம் திருவள்ளூர் மாவட்ட ஆதிதிராவிடர் நலத்துறையில் பணியாற்றும் சமையலர்கள் இரவு காவலர்களாக பணியாற்றும் ஊழியர்களை பணிமூப்பு அடிப்படையில் அலுவலக உதவியாளர்கள் உயர்வு வழங்க வேண்டும் நம் மாவட்டத்தில் பெரும்பாலான மாணவர் மாணவியர் விடுதிகள் மாணவர்கள் இல்லாத காரணத்தால் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது மீண்டும் மாணவர் சேர்க்கையை நடத்தி மூடப்பட்ட விடுதிகளை திறக்க வேண்டும் ,

மாணவர்கள் அதிகம் சேராத விடுதிகளில் அப்பகுதியில் உள்ள அனைத்து மாணவர்களுக்கான இரவு பாடசாலையாக அமைத்தும் இளைஞர்கள் வேலைவாய்ப்பு பெறுவதற்கான பயிற்சி அளிக்கும் பயிற்சி மையமாக உருவாக்க வேண்டும் நம் மாவட்டத்தில் ஆதிதிராவிடர் நலத்துறையில் 20 22ஆம் இடைநிலை ஆசிரியர்களாக பணியாற்றி பதவி உயர்வு பெற்று பட்டதாரி ஆசிரியர்களாக பணியாற்றும் ஆசிரியர்களுக்கு இதுநாள் வரை பணி வரன்முறை செய்யப்பட வில்லை பணி வரன்முறை செய்து உதவிட அம்மா அவர்களை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். உபயோகிக்கப்படாதபள்ளிக்கட்டடங்கள் இடித்து பள்ளி வளாகத்தை தூய்மைப்படுத்த வேண்டும் , பொது பணித்துறை அலுவலர்கள் ஆய்வு செய்து இடுப்பதற்கான வாய்ப்பு இல்லை கட்டடத்தை வேண்டுமானால் சரி செய்து உபயோகப்படுத்தலாம் என தெரிவிக்கின்றனர் மைதானத்தில் குறுக்கே இருப்பதால் மாணவர்கள் ஆசிரியர்கள் பார்வையில் இருப்பதில்லை மாணவர்களை கட்டுக்குள் வைத்திருப்பது பெரும் சிரமமாக இருக்கிறது இந்தநிலைய உரிய அளவில் ஆய்வு செய்து உபயோகம் இல்லா பள்ளிக் கட்டடங்களை இடக்க ஆவன செய்ய வேண்டும் மேற்கண்ட கோரிக்கைகள பரிசீலனை செய்து நிறைவேற்றி உதவிட தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பின் நிறுவனத் தலைவர் சா.அருணன் அவர்கள் திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அம்மா மதிப்புமிகு எஸ்.கவிதா அவர்களிடம் வழங்கி அனைத்துறை கோரிக்கைகளை தெரிவித்தார் மாவட்ட ஆட்சித் தலைவர் நிதானமாக வேறு எந்த கோரிக்கைகள் இருக்கிறது என பொருமையுடன் கேட்டு தங்கள் கோரிக்கைகளை அந்தந்த மாவட்ட அலுவலர்களிடம் கேட்டறிந்து நிறைவேற்றுவதாக தெரிவித்தார் முன்னதாக புதியதாக பதவியேற்ற மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கு தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு சார்பில் வாழ்த்துத்தெரிவித்து பொன்னாடை அணிவித்து புத்தகம் பரிசாக வழங்கி வாழ்த்தினர் இந்த நிகழ்வில் மாநில மாவட்ட வட்ட ஒன்றிய நிர்வாகிகள் என 150 க்கும் மேற்பட்ட தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பினர் கலந்துக் கொண்டனர்



# வீட்டிலிருந்தபடியே இணையம் வழியாக பான் கார்டு பெற்ற காரைக்குடி நபர் - பொதுமக்களுக்கு பயனுள்ள அனுபவப் பகிர்வு

புதிய பான் கார்டு பெறுவதற்காக யாரை அணுகலாம் என்று நண்பர்களிடம் ஆலோசனை கேட்ட நிலையில், இணையத்தின் மூலம் வீட்டிலிருந்தபடியே விண்ணப்பித்து வெற்றிகரமாக பான் கார்டு பெற்ற அனுபவத்தை காரைக்குடியைச் சேர்ந்த ஜெயம் பகிர்ந்துள்ளார்.


இரண்டு வாரங்களுக்கு முன்பு பான் கார்டு பெற முயற்சி செய்த அவர், நண்பர்களின் ஆலோசனையின் பேரில் ஆன்லைன் வழியாக விண்ணப்பிக்க முடிவு செய்தார்.

அதன்படி, என்எஸ்டிஎல் புரோட்டீன் (NSDL Protean) தளத்தின் மூலம் விண்ணப்பித்தார். முதலில் "ஆதார் அடிப்படையிலான e-KYC" முறையைத் தேர்வு செய்து அனைத்து விவரங்களையும் பதிவு செய்தார்.

ஆனால், ஆதார் அட்டையில் உள்ள முகவரி விவரங்கள் அதிக நீளமாக இருந்ததால் அவற்றை முறைமை முழுமையாக ஏற்க முடியாமல் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது. விண்ணப்பக் கட்டணமாக செலுத்திய ரூ.106.70 தொகை இரண்டு நாட்களுக்குப் பிறகு அவரது வங்கிக் கணக்கில் திரும்ப வரவு வைக்கப்பட்டது.

இதையடுத்து, அறந்தாங்கியைச் சேர்ந்த நண்பர் கபார்கான் அவர்களைத் தொடர்புகொண்டு ஆலோசனை கேட்டார். அவரின் பரிந்துரைப்படி, மீண்டும் புரோட்டீன் தளத்தின் உதவி மையத்துடன் தொடர்புகொண்டார். அப்போது, ஆதார் அடிப்படையிலான முறைக்கு பதிலாக புகைப்படம் மற்றும் கையொப்பத்தைப் பதிவேற்றும் முறையைப் பயன்படுத்தி விண்ணப்பிக்க அறிவுறுத்தப்பட்டார்.

அதன்படி, பாஸ்போர்ட் அளவு புகைப்படத்தையும் கையொப்பத்தையும் ஸ்கேன் செய்து பதிவேற்றிய பின்னர் விண்ணப்பம் வெற்றிகரமாக ஏற்கப்பட்டது. பின்னர் பான் கார்டு ஒப்புதல் பெற்று வழங்கப்பட்டது.




இதற்கிடையில் சமூக வலைதளங்கள் மூலமாக வருமான வரித்துறை மற்றும் புரோட்டீன் அமைப்பையும் தொடர்புகொண்டார். சமூக வலைதளத்தில் தகவல் அளித்ததையடுத்து வருமான வரித்துறை அதிகாரிகள் நேரடியாகதொடர்புகொண்டு, வருமான வரித்துறையின் அதிகாரப்பூர்வ இணையதளம் மூலம் விண்ணப்பித்தால் 24 மணி நேரத்திற்குள் இலவச e-PAN பெறும் வசதி இருப்பதாக விளக்கமளித்தனர். மேலும், அந்தத் தளத்தின் மூலம் விண்ணப்பித்தவர்களுக்கு மட்டுமே தங்களால் நேரடி உதவி வழங்க இயலும் என்றும் தெரிவித்தனர்.

இது குறித்து விருதுநகரைச் சேர்ந்த நண்பர் செந்தில்குமார் கூறுகையில், சில மாதங்களுக்கு முன்பு வருமான வரித்துறையின் இணையதளம் மூலம் எந்தக் கட்டணமும் செலுத்தாமல் எளிதாக e-PAN பெற்றதாகவும், தற்போது அதையே பயன்படுத்தி வருவதாகவும் தெரிவித்தார்.

எனினும், அந்தத் தகவல் கிடைப்பதற்கு முன்பே புரோட்டீன் தளத்தின் மூலம் விண்ணப்பித்திருந்ததால், அதே நடைமுறையைத் தொடர்ந்து வெற்றிகரமாக பான் கார்டைப் பெற்றதாக ஜெயம் தெரிவித்தார்.

மேலும், புரோட்டீன் அமைப்பின் சமூக வலைதளப் பிரிவு வழங்கிய மின்னஞ்சல் முகவரிக்கு விவரங்களை அனுப்பிய பின்னர், அவரது கோரிக்கைக்கு விரைவாக தீர்வு கிடைத்ததாகவும் கூறினார்.

"அரசு அலுவலகங்கள், தனியார் மையங்கள் அல்லது சேவை நிறுவனங்களுக்கு அலையாமல், வீட்டிலிருந்தபடியே இணையத்தின் மூலம் பான் கார்டு பெற முடியும். தேவையான ஆவணங்கள் மற்றும் சரியான வழிமுறைகளைப் பின்பற்றினால் இந்த செயல்முறை மிகவும் எளிதானதாக உள்ளது," என்று அவர் தெரிவித்தார்.

இந்த முயற்சியில் உதவி மற்றும் ஆலோசனை வழங்கிய அறந்தாங்கி கபார்கான், விருதுநகர் செந்தில்குமார் மற்றும் சமூக வலைதளங்கள், வாட்ஸ்அப் குழுக்கள் வாயிலாக தகவல்களை பகிர்ந்த அனைத்து நண்பர்களுக்கும் அவர் தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

- ஜெயம், காரைக்குடி

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.